நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 48/2022**

**P.W. 6 -ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பழனியப்பன் |
| தந்தை / கணவர் பெயர் | : | பெருமாள் |
| கிராமம் | : | கோல்நாயக்கன்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 6** |
| வயது | : | 67 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025-ஆம் வருடம், அக்டோபர் மாதம், 08-ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**1, 3 வதுஎதிரிகள் ஆஜரில் இல்லை .2 வது எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:-03.31PM

1. சின்னசாமி எனது அண்ணன் ஆவார். லட்சுமி என்பவர் எனது அண்ணன் மனைவி என்றால் சரிதான். சின்னதம்பி என்பவர் எனக்கு மாமன் மச்சான் முறையாவார். கனகராஜ் எனது மகன் என்றால் சரிதான். ஜெயப்பிரியா எனது உறவினர்தான். சாந்தி என்பவர் எனது மகள் தான். சாந்தியின் மருமகன் தனபால்

என்றால் சரியல்ல. எனது பேத்திக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.

2. தனபால் என்பவரின் அப்பா எனது அண்ணன் குப்புசாமியின் மருமகன் ஆவார். குப்புசாமியின் மகன் பெயர் முனியன் என்றால் சரிதான். அந்த முனியன்தான் எனது காலை உடைத்துவிட்டதாக காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. இந்த வழக்கின் எதிரிகளுக்கும் நான் உள்ளிட்ட சின்னசாமி, பொன்னுசாமி, குப்புசாமி ஆகியோர்களுக்கு இடையே சிவில் நீதிமன்றத்தில் அ.வ.எண் 35/2021 என்ற எண்ணில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். எதிரியின் வீட்டிற்கு தண்ணீர் குழாய் செல்கிறது என்றால் சரிதான். எதிரிகளுக்கு ஒரு ஆழ் குழாய் கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றில் கல்லை போட்டு தூர்த்து விட்டதாக என்மீது எதிரிகள் புகார் கொடுத்திருந்தார்கள் என்றால் சரிதான்.

4. நாங்கள் நான்கு நபர்களும் எதிரிகள் வீட்டிற்கு செல்லும் குடிநீர் குழாயை உடைத்து விட்டதாக எதிரிகள் புகார் கொடுத்து அது சம்பந்தமாக காவல் துறையினர் எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த தேதி எனக்கு தெரியவில்லை. 2021ம் ஆண்டு நடைபெற்றது. இந்த சம்பவத்தின்போது கனகராசும், சாந்தியும் திருப்பூரில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். போன் செய்து தகவல் சொல்லி அவர்கள் வந்து தான் புகார் கொடுத்தார்கள்.

5. நான் தான் போன் செய்து தகவல் சொன்னேன். நான் போன் செய்து தகவல் சொன்னபோது மாலை 4.00 மணி இருக்கும். சம்பவத்தின் போது எனக்கு எதுவும் காயம் ஏற்படவில்லை. சின்னசாமிக்கும், அவரது மனைவிக்கு தான் ஏற்பட்டது. நான் போன் செய்து வரசொன்னேன் விபரத்தை காவல் துறை விசாரணையில் சொல்லியுள்ளேன். உதவி ஆய்வாளர் விக்னேஷ்மூர்த்தி என்பவரை எனக்கு தெரியும். காவல் துணை கண்காணிப்பாளர் கிருஷ்ணமூர்த்தி என்பவரை எனக்கு தெரியும்.

6. இந்த சம்பவத்திற்கு முன்பாக பைப் உடைத்த பிரச்சினை சம்பந்தமாக மேற்படி இருவரும் சம்பவ இடத்திற்கு விசாரணைக்கு வந்தார்களா என்றால் சரிதான். அப்போது உதவி ஆய்வாளர் விக்னேஷ்மூர்த்தி எதிரிகளை அடித்து ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அவர் அடிக்கவில்லை. விக்னேஷ்வரமூர்த்தி

அடித்ததை வீடியோ எடுத்து மேல் அதிகாரிகளுக்கு எதிரிகள் அனுப்பி வைத்தார் என்றால் சரியல்ல.

7. வையாபுரி காட்டிற்கு தெற்குபுறம் சின்னசாமி காடு உள்ளது . இரண்டும் ஒரே இணையாக உள்ளது. பொதுவான தடம் கிழக்கு மேற்காக இரண்டு காடுகளையும் பிரிக்கும் விதத்தில் செல்கிறது. வையாபுரியின் காட்டிற்கு கிழக்குபுறம் காளியப்பன் என்பவரின் நிலம் உள்ளது. அதை ஒட்டியவாறு எனது நிலம் உள்ளது. அதில் தான் நான் குடியிருக்கிறேன்.

8. வையாபுரியின் நிலத்திற்கு மேற்காக பழனியப்பன் ஆகிய எனக்கு நிலம் உள்ளது. ஆனால் இதுவரை பாகம் பிரிக்கபடிவில்லை. போலீசார் அந்த இடத்தை பார்த்து வரைபடம் எதாவது வரைந்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தை மட்டும் பார்த்துவிட்டு சென்றார்கள். பொன்னுசாமி என்பவர் எனது அண்ணன் ஆவார். அவருடைய மருமகள் பெயர் சீதா என்றால் சரிதான். அவர் சேலத்தில் போலீசாக உள்ளார்.

9. சீதா என்பவர் சொல்லிதான் நடக்காத சம்பவத்தை நடந்து மாதிரி வழக்கு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எந்த இடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்கிறேன் என்றால் இருவருக்கும் பாத்தியப்பட்ட பொது வழியில் நடந்தது. சம்பவத்தின்போது நான் சென்று தடுத்தேன் என்றால் கல்லும் கட்டையும் ஆக இருந்ததால் நான் தடுக்கவில்லை. போலீசார் சம்பவ நடந்த அடுத்த நாள் காலை 8.00 மணிக்கு வந்து விசாரித்தார்கள்.

10. சின்னசாமியும், லட்சுமியையும் நானும், சின்னசாமியின் மகன் ஈஸ்வரன், சந்திரா, ஆகியோர் தான் மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். மருத்துவமனையில் சேர்க்கும்போது மாலை சுமார் 5.00 மணி இருக்கும். காவல் துறை விசாரணையில் மேற்படி நாங்கள் மூவரும் காயம் பட்ட நபர்களை சிகிச்சையில் சேர்த்தாக சொன்னேன். நான் மருத்துவமனையில் செல்லும்போது எங்களுக்கு முன்பாகவே எதிரிகள் மருத்துவமனையில் படுத்திருந்தார்கள்.

11. சீதா, மற்றும் விக்னேஷ்வரமூர்த்தி ஆகிய இருவரும் சொல்லி கொடுத்தன் அடிப்படையில் எதிரிகளை தாக்கிய வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டி எங்களுக்கும் காயம் ஆனதாக மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்து அவர்கள் சொல்லி கொடுத்தவாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. எனது மகன் மாலை சுமார் 5.30 மணி அளிவில் திருப்பூரில் இருந்து நேராக மருத்துவமனைக்கு வந்து விட்டார்.

12. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் சொன்னவாறு யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் சொல்லி கொடுத்ததை அப்படியே ஒப்புவிக்கிறேன் என்றாலும், சரியல்ல. சிவில் வழக்கிற்கு ஆதாரம் தேடி வேண்டி பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-04.02 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**